සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- **இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

1. சமூகத்தின் அடிப்படை அலகு .................... ஆகும்.
   (பாடசாலை / குடும்பம் / மத வழிபாட்டுத்தலங்கள்)

2. ஒரு நாடு தமது தேச எல்லைக்குள் அதிகாரம் செலுத்தக்கூடியவாறு அமுல் செய்யப்படுகின்ற சட்டம் ......................................... எனப்படும்.
   (சிவில் சட்டம் / பொதுச் சட்டம் / தேசிய சட்டம்)

3. சனநாயக ஆட்சி முறையொன்றில் ............................... நீதிமன்றம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
   (உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுத்தல் / கடமைகளை நிறைவேற்றல் / நீதியை மேற்கொள்ளல்)

4. சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தும் பிரதான பொறுப்பு ............................ உள்ளது.
   (தனிநபருக்கு / நாட்டுக்கு / சமூகத்திற்கு)

5. மக்களுக்கு ஏற்படும் சிறு பிரச்சினைகளை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் தீர்வுகளை பெற்றுக்கொள்ள அமைக்கப்பட்டுள்ள நிறுவனமானது ................................ ஆகும்
   (சமூக நீதிமன்றம் / குடும்ப நீதிமன்றம் / இணக்க சபை)

- **இலக்கம் 6-10 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) அடையாளத்தையும் பிழையாயின் (×) அடையாளத்தையும் அடைப்புக்குள் இடுக.**

6. விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயன்முறை ஆராய்ச்சியாகும். ( )
7. வளங்களைப் பேணக்கூடியதும் குறுகிய காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான அபிவிருத்தி பேண்தகு அபிவிருத்தியாகும். ( )
8. இலங்கை புராதனகாலம் முதலே விவசாயத்தைச் சீவனோபாயமாகக் கொண்டதொரு நாடாகவே இருந்து வந்துள்ளது. ( )
9. தொழிநுட்பத்தில் ஏற்பட்ட விரைவான முன்னேற்றம் காரணமாக இந்நாட்டில் சேவைத்துறையில் தெளிவான முன்னேற்றத்தைக் காண முடிந்தது ( )
10. சமூகத்தில் காணப்படக்கூடிய சகல தொழில் சந்தர்ப்பங்களும் வேலையுலகு எனப்படுகிறது. ( )

♦ **இலக்கம் 11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை இடைவெளியில் எழுதுக.**



A

11. அருகே படம் A இனால் காட்டப்படுவது தேர்தலின் போது வாக்காளர் ............................................ ஆகும்.

12. மறைமுக ஜனநாயகம் ................................. ஜனநாயகம் எனவும் அழைக்கப்படும்.

13. மக்கள் ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்யும் போது ........................................................ செயற்படுவர்.

14. அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு ஒன்றிணைந்த தனிநபர் குழுவொன்று .................................. ஆகும்.

15. ஒரு கட்சிமுறை நிலவும் நாடுகளுக்கான உதாரணம் ஒன்று .................................. ஆகும்.

♦ **இலக்கம் 16 - 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

16. உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுவது,
    1) பிரதேச சபைகளின் வழிகாட்டலின் கீழ்
    2) மத்திய அரசின் வழிகாட்டலின் கீழ்
    3) பாராளுமன்றத்தின் வழிகாட்டலின் கீழ்
    4) ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ்

17. உள்ளூராட்சி மன்றங்கள் மூலதன வளத்தைப் பெற்றுக்கொள்ளும் வழி ஒன்றானது,
    1) பொதுச் சேவைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம்
    2) பொதுமக்களினால் சேகரிக்கப்படும் நன்கொடைகள் மூலம்
    3) ஜனாதிபதி நிதி மூலம்
    4) வெளிநாடுகளினால் கிடைக்கப்பெறும் கடன் உதவி

18. உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொதுமக்களால் மேற்கொள்ளப்படவேண்டிய கடமைகளுள் ஒன்று
    1) உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படும் சேவைகளை குறைவான அளவில் பெற்றுக்கொள்ளல்
    2) உரிய நேரத்தில் வரி செலுத்துதல்
    3) உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படும் சேவைகளை பெற்றுக்கொள்ளாதிருத்தல்
    4) மேலே குறிப்பிட்ட எதுவும் இல்லை

19. உள்ளூராட்சி மன்றமொன்றின் பிரதானியின் அதிகாரங்களுள் ஒன்றானது,
    1) வரி அறவிடல்
    2) நிரந்தர கட்டடங்களுக்கான அனுமதி வழங்கப்படாதிருத்தல்
    3) மக்கள் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குவது தொடர்பில் முன்னின்று செயற்படல்
    4) உள்ளூராட்சி மன்றத்துக்குரிய நடவடிக்கைகளை மத்திய அரசுக்கு வழங்குதல்

20. வெற்றிகரமான சனநாயக ஆட்சி முறை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியானது
    1) நேர்மை, வினைத்திறன் மற்றும் முன்மாதிரிமிக்க தலைமைத்துவம்
    2) தன்னைப்பற்றிய எண்ணத்துடன் மற்றவர்களுக்கு சேவை செய்யும் தலைமைத்துவம்
    3) தம்மிடம் காணப்படும் ஆட்சி அதிகாரத்தை தன் குடும்பத்தாருக்கு வழங்கும் தலைமைத்துவம்
    4) மரணிக்கும் வரை ஆட்சியில் இருக்க முயற்சி செய்யும் தலைமைத்துவம்

(20 X 2 = 40 புள்ளிகள்)

**பகுதி** II

முதல் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. 1) பாடசாலையில் காணப்படும் சமூக நிறுவனங்கள் 2 தருக.
   2) சட்டத்தின் மூலாதாரங்கள் 2 குறிப்பிடுக.
   3) பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பிரதான செயற்பாடுகள் மூன்றையும் குறிப்பிடுக.
   4) சமகால தொழிற்சந்தையின் வகைகள் இரண்டும் எவை?
   5) நேரடி சனநாயக ஆட்சிமுறை நடைமுறைப்படுத்துவது இலகுவாய் அமைந்தமைக்கான காரணிகள் 2 தருக.
   6) தேர்தலின் போது பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்காக பயன்படுத்தும் இரு முறைகளைக் குறிப்பிடுக.
   7) உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயத்தின் போது கவனத்திற்கொள்ளப்படும் காரணிகள் 2 தருக.
   8) மோதல் தீர்விற்கான வழிமுறைகள் 2 குறிப்பிடுக. (16 புள்ளி)

2. 1) அருகே A படத்தில் காட்டப்படும் சந்தர்ப்பத்தை பெயரிடுக. (2 புள்ளி)
   2) சமூகப் பாதுகாப்பிற்காக குடும்பத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் 5 குறிப்பிடுக. (5 புள்ளி)
   3) சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதற்காகவும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் செயற்படுகின்ற நிறுவனங்கள் 4 தருக. (4 புள்ளி)




A

3. 1) கீழே தரப்பட்டுள்ள தகவல்களை வாசித்து பொருத்தமான முறையில் அட்டவணையை நிரப்புக.
   A. வேலைகள் இலகுவாக்கப்பட்டமை
   B. மனித வாழ்வு இயந்திரமடைதல்
   C. நேரம் மீதப்படுத்தப்பட்டமை
   D. சமூகச் சிக்கல் அதிகரித்தமை
   E. மானிட சமூகத் தொடர்புகள் இலகுவாகியமை
   F. மனிதன் பொருத்தமற்ற நுகர்வுக் கோலத்துக்கு மாறியமை
   G. சுற்றாடல் மாசடைதல் வேகமடைந்தமை
   H. வினைத்திறன் அதிகரித்தமை

| சாதகமான விளைவுகள் | பாதகமான விளைவுகள் |
|---|---|
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |
| ................................................................ | ................................................................ |

(8 புள்ளி)


   2) கீழே தரப்பட்டுள்ள படங்களை பெயரிடுக.



A



B



C

(3 புள்ளி)

4. 1) அருகே A படத்தில் உமக்குத் தென்படும் சகவாழ்விற்கான பண்புகள் 6 குறிப்பிடுக. (6 புள்ளி)



A

2) சகவாழ்வின் பண்புகளை வாழ்க்கைக்குரியதாக்கிக் கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் 5 தருக. (5 புள்ளி)

5. 1) கீழே உருவில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புக.

சனநாயகம்

1. ................................ 2. ................................

(2 புள்ளி)

2) சனநாயகத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 தருக. (4 புள்ளி)

3) பிரசை ஒருவருக்குள்ள உரிமைகள் 5 குறிப்பிடுக. (5 புள்ளி)

6. 1) இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் 4 குறிப்பிடுக. (4 புள்ளி)

2) வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிகள் 4 தருக. (4 புள்ளி)

3) வாக்குரிமையின் முக்கியத்துவம் 3 குறிப்பிடுக (3 புள்ளி)

7. 1) கீழே காணப்படும் உருவிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

நகரபிதா (மக்கள் பிரதி நிதி)

↓

1. ................................

2. ................................ 3. ................................

↓

4. ................................

↓

5. ................................

(5 புள்ளி)

2) தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

3) உள்ளூராட்சி மன்றங்களினால் நிறைவேற்றப்படும் சேவைகளை கொண்ட படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக. (3 புள்ளி)







1 ........................................ 2 ........................................ 3 ........................................